அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். சீக்கிரமாக விசாரணை நடத்தி, உடனடியாக முடிவு எடுப்பதற்கு ஏதாவது வழி செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இதற்காக ஸ்பெஷல் ஸ்டாஃப் போட்டிருக்கிறார்கள். விசாரணை செய்து கொண்டிருக்கிறார்கள். கூடிய சீக்கிரம் விசாரணை நடத்த வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், 15-8-1966-க்குள் ரிப்ளை தரவேண்டும் என்று அவர்களுக்கு 'ஷோ காஸ்' நோட்டீசும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், இந்த சொஸைட்டியின்மீது என்னென்ன குற்றச்சாட்டுகள் வந்திருக்கின்றன, அதனுடைய நிர்வாகத்தினர் யார் என்று அறியலாமா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அந்தத் தகவல் இங்கு இல்லை. ஆனால் 13 சொஸைட்டிகளுக்கும் 'ஷோ-காஸ்' நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏன் இதிலிருந்து நீக்கக் கூடாது என்று கேட்கப்பட்டிருக்கிறது. மற்ற விவரங்கள் வேண்டுமென்றால் தனியாகத்தான் கேள்வி போடவேண்டும்.

மத்தியக் கூட்டுறவுப் பாங்கியில் குளிர்ப்பதனச் சாதனம்

***172 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் கூட்டுறவு அமைச்சர் நயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா--

(அ) வட ஆற்காடு மாவட்டம், வேலூரில் உள்ள மத்திய கூட்டுறவுப் பாங்கியில் குளு குளு சாதனம் (air conditioning apparatus) அமைத்ததற்கு அரசாங்க அனுமதி பெறப்பட்டுள்ளதா ?

(இ) மற்ற மாவட்டங்களிலுள்ள கூட்டுறவுப் பாங்கிகளிலும் இம்மாதிரிச் சாதனங்கள் அமைக்க அனுமதி பெறக் கோரிக்கைகள் வந்துள்ளனவா ?

கனம் திரு. ந. நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) & (இ) இல்லை. தங்களுடைய கட்டடங்களில் குளிர்ப்பதனச் சாதனங்களை (air-conditioning units) அமைப்பதற்குச் செலவு செய்ய மாவட்டக் கூட்டுறவு மத்திய பாங்குகள் அரசாங்கத்தின் அனுமதி பெறவேண்டிய அவசியமில்லை.

Multimetal ore deposits

***173 *Q.*—Sri V. SANKARAN :** Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether any deposits of Gypsum have been discovered in the taluks of Pollachi, Palladam and Udumalpet of Coimbatore district; and

(*b*) if so, the estimated extent of the said deposits?